ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2019.09.25 |

## மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி – 2018

### *மேல் மாகாணம் தொடர்ந்தும் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பாளராக விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் பங்களிப்புச் செய்தன.*

**முக்கிய அம்சங்கள்**

பெயரளவிலான மொ.உ.உற்பத்தி 2018
ரூ. 14,450 பில்

மா.மொ.உ.உற்பத்தி பங்கு 2018

அதிகூடியது
**மேல் மாகாணம்:**
**ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பங்கு அதிகரித்துள்ளது**

2018ஆம் ஆண்டிற்காக இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கமைய[1] மேல் மாகாணம் தொடர்ந்தும் பாரிய பங்கிற்கு வகைகூறியது. முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் அதிகூடிய பங்களிப்பாளர்களாக மத்திய மற்றும் வட மேல் மாகாணங்கள் காணப்பட்டன.

ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திப் பங்கில் அதிகூடிய அதிகரிப்பு மேல் மாகாணத்தில் பதிவாகியிருந்தது. அதிகரிப்பினைப் பதிவுசெய்த ஒரேயொரு வேறு மாகாணம் வட மத்திய மாகாணம் ஆகும். மத்திய, சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் பங்குகள் 2018இல் குறைவடைந்த அதேவேளை வடமேல், தென், கிழக்கு மற்றும் வட மாகாணங்களின் பங்குகள் மாற்றமின்றிக் காணப்பட்டன.

**அட்டவணை 1**
**மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தி :2017 - 2018**
ரூ. பில்.

| மாகாணம் | 2017(அ) | 2018(ஆ) |
|---|---|---|
| மேல் | 5,086 | 5,558 |
| மத்திய | 1,622 | 1,710 |
| வட மேல் | 1,478 | 1,593 |
| தென் | 1,348 | 1,440 |
| சப்பிரகமுவா | 1,054 | 1,097 |
| ஊவா | 776 | 828 |
| கிழக்கு | 755 | 821 |
| வட மத்திய | 749 | 815 |
| வட | 550 | 588 |
| **இலங்கை** | **13,418** | **14,450** |

அ. திருத்தப்பட்டது
ஆ. தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 1**
**மாகாண மொ.உ.உற்பத்தியின் பங்கு - 2017 - 2018**




[1] மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியானது மாகாணக் குறிகாட்டிகளைப் பயன்படுத்தி தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆண்டு பெயரளவிலான மொ.உ.உற்பத்தித் தொகைகளை வேறுபடுத்துவதன் மூலம் மதிப்பிடப்படுகின்றது.

## மாகாணங்களுக்குள்ளான பொருளாதார நடவடிக்கைகள்

மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திக்கு 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட பங்களிப்புடன் பணிகள் நடவடிக்கைகள் அனைத்து மாகாணங்களிலும் முதன்மையாகப் பங்காற்றின. தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட போக்குகளுக்கமைவாகக் காணப்பட்ட போக்குவரத்து; மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்; அத்துடன் ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகள் என்பன மாகாண ரீதியான பணி நடவடிக்கைகளின் முக்கிய செலுத்திகளாக அமைந்திருந்தன.

மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திக்கு கைத்தொழில் நடவடிக்கைகளிலிருந்தான பங்களிப்பானது வட மத்திய மாகாணத்தில் 16.2 இலிருந்து மேல் மாகாணத்தில் 32.8 சதவீதம் வரை வேறுபட்டிருந்தது. நிர்மாணம்; உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் தயாரித்தல்; புடவைகள் தயாரித்தல், அணியும் ஆடைகள் மற்றும் தோல் தொடர்பான உற்பத்திகள்; அத்துடன் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் என்பன அநேகமான மாகாணங்களில் முக்கிய பங்களிப்பாளர்களாகக் காணப்பட்டன.

அட்டவணை 1
மாகாண ரீதியான பொருளாதார செயற்பாட்டு[அ] சதவீதப் பங்கு :2018[ஆ] ிய வங்கி

| மாகாணம் | 2018 | | |
|---|---|---|---|
| | வேளாண்மை | கைத்தொழில் | பணிகள் |
| மத்திய | 7.9 | 28.8 | 55.0 |
| கிழக்கு | 16.5 | 17.7 | 57.5 |
| வட மத்திய | 12.2 | 16.2 | 63.4 |
| வட மேல் | 10.5 | 27.2 | 54.0 |
| வட | 15.5 | 21.4 | 54.8 |
| சப்பிரகமுவா | 8.9 | 25.3 | 57.6 |
| தென் | 13.3 | 16.8 | 61.6 |
| ஊவா | 13.2 | 27.6 | 50.9 |
| மேல் | 2.0 | 32.8 | 56.9 |
| **இலங்கை** | **7.9** | **27.0** | **56.8** |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி**

அ. உற்பத்தி சரிப்படுத்தல் மீதான வரி மற்றும் உதவு தொகைகளின் சதவீதப் பங்கு உள்ளடக்கப்படாமையினால் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் சதவீதப் பங்குகளின் சேர்த்தல் 100 இற்கு சமப்படுத்தப்படவில்லை.

ஆ. தற்காலிகமானது.

தேசிய உள்நாட்டு உற்பத்தியின் பிரிவுசார் செயலாற்றுகையினை ஒத்த வடிவத்தினைப் பின்பற்றி, மாகாண ரீதியான மொ.உ.உற்பத்திக்கு வேளாண்மை நடவடிக்கைகளிலிருந்தான பங்களிப்பு அனைத்து மகாணங்களிலும் 2.0 தொடக்கம் 16.5 சதவீத வீச்சில் குறைவாகக் காணப்பட்டது. கிழக்கு மாகாணமானது 16.5 சதவீத அதிகூடிய பங்கினைப் பதிவுசெய்தது, இதற்கு அரிசி உற்பத்தி; கடல்சார் மீன்பிடி மற்றும் கடல்சார் மீள்வளர்ப்பு; விலங்கு உற்பத்தி என்பனவற்றின் வளர்ச்சி காரணமாக அமைந்திருந்தது.